IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.383/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.45p.m.

பி.வா.சா. 2 சாட்சி குருவத்தாய் க.பெ.ஆறுமுகம் (எ) அம்மாசி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்குச் சொத்து சம்மந்தமாக எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றால் 2 வழக்குகள் நடைபெற்று வருகிறது. வாதி கொண்டப்பன் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா ஆகும். சாட்சி ராவுத்தர் எனக்கு என்ன உறவு என்றால் எனது கணவரின் சகோதரர் ஆவார்.

2. பி.வா.சா.1ன் சாட்சி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, எனது மாமனார் வாங்கினார் அவர் பெயர் கொண்டப்பன் ஆகும். எனது மாமனார் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் இராமசாமியிடமிருந்து கிரையம் வாங்கினார். மேற்படி கிரையப்பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. யாராவது படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பிக்கவில்லை அதனால் எனக்கு மேற்படி கிரையப்பத்திரத்தின் விபரம் தெரியாது.

3. எனது நிரூபணவாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் எனது வழக்கறிஞர் ஆகும். எனது வழக்கறிஞர்

நிருபணவாக்குமூலத்தில் என்ன விபரம் கூறியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது,எனக்கு படித்தும் காட்டவில்லை. வீடு கட்டுவதற்கு முன்பாக தெற்கு பகுதியில் எத்தனை அடி விட்டு கட்டினோம் என்றால் தெரியாது, வீதியாக உள்ளது.

4. எனது கிரையப்பத்திரத்தில் தெற்கு பகுதி வீதி என்று காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. எனது கணவர் தாக்கல் செய்த வழக்கு விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது, வீதி வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்ததாக தெரியும். எனது சாட்சியம் எனது வழக்கிற்கு விரோதமாக உள்ளது என்றாலும், எனது கணவர் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும், வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 12.55 P.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.03 10:21:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.